[27th September 1958

SRI K. VINAYAKAM : இந்த பிராஜக்டுகளின் பக்கத்தில் தோட்டங்களும் புல் பயிரிடும் வயல்களும் அத்தியாவசியமானதா ? அப்படி அத்தியாவசியமில்லை என்றால் அந்தப் பணத்தை வேறு ஏதாவது நல்ல வேலைக்கு பயன்படுத்தக் கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இம்மாதிரி தோட்டங்கள் வைப்பது நல்லது என்றுதான் அரசாங்கம் கருதுகிறது. அப்படியானால் அதற்காக செலவழிப்பதும் நல்லதுதான் என்று அரசாங்கம் கருதுகிறது.

SRI K. R. NALLASIVAM : இவைகளுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற நிலத்தினுடைய விஸ்தீரணம் எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN : தனிக் கேள்வி கேட்க வேண்டும்.

SRI N. MAHALINGAM : இந்த பிராஜக்டுகளை பார்ப்பதற்கு பொது மக்கள் ஆயிரக்கணக்கில் குழந்தைகளுடன் வருவது அரசாங்கத்திற்கு தெரியுமா ? ஆகவே, அங்கு குழந்தைகள் விளையாடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : அது உண்மைதான். அநேக ஜனங்கள் பார்ப்பதற்காக வந்து போகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு தோட்டங்கள் போன்ற ஏற்பாடுகள் செய்வது நல்லது. கனம் அங்கத்தினர் சொல்லும் யோஜனை நல்லது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Supply of electricity for agricultural purposes

* 562 *Q*.—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1956–57, 1957–58-ம் ஆண்டுகளில் விவசாயத்திற்காக மின்சாரம் உபயோகிக்கும் திட்டங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டன ?

(ஆ) எத்தனை திட்டங்கள் பற்றாக்குறை திட்டங்கள் (Not remunerative) என்று கைவிடப்பட்டன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Eighty-five schemes were taken up for execution during 1956–57 and 60 during 1957–58.

(*b*) 47.

SRI S. M. ANNAMALAI : விவசாயிகளுக்கு மின்சாரம் தேவை என்றால் பகலில்தான் மின்சாரம் கொடுக்கப்படவேண்டும். ஷிப்டு முறை இருப்பதினாலும், மினிமம் சார்ஜ் அதிகமாக இருப்பதினாலும் கன்ஸ்யூமர்கள் முன்வருவதில்லை. ஆகவே மினிமம் சார்ஜை குறைப்பதற்கும், ஷிப்டு முறையை எடுப்பதற்கும் சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : கனம் அங்கத்தினர் கன்ஸ்யூமர்கள் முன்வராததற்கு இரண்டு குறைகள் சொன்னார்கள். எந்தக் காலத்திலும் கன்ஸ்யூமர்கள் முன்வராமல் இல்லை. நிறைய தேவை இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் போய் மின்சாரம் கொடுப்பதற்கு வேண்டி எல்லா முறைகளையும் பரிசீலனை செய்து பார்த்த பிற்பாடு ஒரு சில கிராமங்களில் கண்டிப்பாக இதை விட்டுவிடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. கன்ஸ்யூமர்கள் ஒத்துழைப்பு குறைவினால் இது ஏற்படவில்லை. பணம் ஓரளவுக்கு வரவேண்டும், 10 சத விகிதம் காரண்டி வரவேண்டும் என்ற முறையில் திட்டம் போடக்கூடிய நேரத்தில் சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. மற்றொரு குறை இரவு நேரத்தில் தான் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். சமீப காலத்தில் நீர் நிலைகளில் தண்ணீர் மட்டம் உயர்ந்திருப்பதால் 'நைட் சப்ளை' மாத்திரம் அல்லாமல் பகல் நேரத்திலும் எல்லா கன்ஸ்யூமர்களுக்கும் மின்சாரம் கொடுப்பதற்கு இப்பொழுது அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது.

27th September 1958]

SRI S. M. ANNAMALAI : இரவு பூராவும் கரண்டு இருக்கிறது. ஆனுல் காலை 6-லிருந்து 12 மணி வரையிலும், 12 மணியிலிருந்து மாலை 6 வரையிலும் ஆக இரண்டு ஷிப்டுகள் இருக்கின்றன. அதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டேன்.

THE HON. SRI V. RAMAIAH : கனம் அங்கத்தினர் கேட்டதற்கு மேல் நான் அதிகமாக பதில் சொல்லிவிட்டேன் என்று நினைக்கிறேன். பகல் நேரத்தில் இரண்டு ஷிப்டுகள் இருப்பது எனக்கு நன்ருகத் தெரியும். ஆனுல், மாகாணம் பூராவும் இருக்கக்கூடிய நிலைமையை பார்த்து, விவசாயிகளுக்கு அதிக ஆதரவு கொடுக்க வேண்டும், விவசாயிகள் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்று கருதி, இரவு நேரத்தில் மட்டும் சில விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுத்துக்கொண்டிருந்ததை இப்பொழுது ரத்து செய்து, அவர்களுக்கு பகல் நேரத்தில் கொடுப்பதற்கு இப்பொழுது அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது.

Madurai District Board

*563 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ஸ்தல-ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா போர்டின் தற்போதைய நிதி நிலையென்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : According to the Budget Estimate for 1958–59, the financial position of the Madurai District Board like several other district boards is not satisfactory.

SRI N. R. THIAGARAJAN : ஆசிரியர்களுக்கு ஒழுங்காக சம்பளம் கொடுக்கப்படாததோடு, கண்டிராக்டர்களுக்கும் பணம் ஒழுங்காக கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. இருக்கிற பணம் துர்விநியோகம் செய்யப்படுகிறதா, கணக்கு வழக்குகள் சரியாக வைக்கப்படுகிறதா என்று பரிசீலனை செய்யப்படுமா ? முதலில் அட்வான்ஸாக ஜில்லா போர்டுக்கு ரூபாய் 5 லட்சம் கொடுக்கப்படுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : தனிக் கேள்வி கேட்கவேண்டும்.

SRI D. S. AUTHIMOOLAM : 'ஸாடிஸ்பாக்டரி இல்லை' என்று சொல்லியிருக்கிருர்கள். அதில் விவரமே இல்லை. பட்ஜெட்டில் டெபிஸிட்டா ? ஜெனரல் அக்கவுண்டில் எவ்வளவு டெபிஸிட் ? எலிமெண்டரி எஜுகேஷனில் எவ்வளவு டெபிஸிட் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : ஜெனரல் டெபிஸிட் ரூபாய் 6,15,490, அதில் டி.எ. கிராண்டு ரூபாய் 4,08,585 ; மீதி டெபிஸிட் இருப்பது ரூபாய் 2,06,905.

SRI S. LAZAR : மதுரையில் மட்டும் அல்லாமல், வேறு ஜில்லா போர்டுகளும் இதேமாதிரி திருப்திகரமான நிலையில் இல்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவைகளை திருப்திகரமான நிலைமைக்கு கொண்டு வருவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். இவைகளையெல்லாம் சீர்திருத்தம் செய்து, ஜில்லா போர்டுகள் மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றன.